**கவனிக்க.-** *23.05.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி III, பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1865 - 2014 මැයි මස 30 වැනි සිකුරාදා - 2014.05.30**

*1865 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 790 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 791 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 793 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *ரஞ்ஜித் சியம்பலாபிட்டிய சிநேகபூர்வ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, மே 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2014, யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2014

*மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் லொறிக்கான பகிரங்க முடிய விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக் கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன்வைக்க முடியும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.*

*விண்ணப்பங்கள் யாவும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித முகப்பின் மேல் மூலையில் "மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

*கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.*

*இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2014, ஆனி மாதம் 13 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.*

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | வழக்கு இல. | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்பு கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | லொறி - 01 | L. A. Ley JS - 6297 | AR 449/11 | MC/BAT/02/2013 | 2,000 |

*குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஆனி மாதம் 16 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு சமுகமளித்த கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவினால் திறக்கப்படும்.*

*விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ்வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற பெறுகைக் குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.*

*விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனத்தை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.*

*விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு.*

*விற்பனை செய்யப்படும் வாகனத்திற்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*மேற்படி முடிய விலை மனு ஊடான விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவுக்கே உரித்தானதாகும்.*

*வீ. சந்திரமணி,*
*மேல் நீதிமன்ற நீதிபதி.*

*மேல் நீதிமன்றம்,*
*மட்டக்களப்பு,*
*2014, மே 12.*

*5-852*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

களனி, வெதமுள்ள, கண்டி றோட், இலக்கம் 102, 1 ஆம் லேன் எனும் முகவரியைச் சேர்ந்த ஜெனிபர் அன்டநெட் பெரேரா (தே. அ. அ. இல. 628041032 எக்ஸ்) ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிப்பதாவது,

2005, புரட்டாதி மாதம் 1 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. எச். எம். தர்மவர்தன ஜயசிங்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 1518 ஆம் இலக்கமுடைய மேற்படி தத்துவப்பத்திரம் களனி, வெதமுள்ள, கண்டி றோட், இலக்கம் 102, 1 ஆம் லேன் எனும் முகவரியைச் சேர்ந்த நெஸ்ட்டா பெரேரா அல்லது நெஸ்ட்டா பிரான்சிஸ் (தே. அ. அ. இல. 528520073 வீ) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட மேற்படி தத்துவப்பத்திரம் 2014 ஆம் வருடம் வைகாசி மாதம் 9 ஆந் திகதி முதல் இரத்துச்செய்யப்பட்டு செயலற்றுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன். மேற்படி தத்துவப்பத்திரம் வைத்திருந்த வருடன் இனிமேல் எவராவது கொடுக்கல் வாங்கல் அல்லது வேறெவ்விதமான பரிமாற்றம் செய்தாலும் அதற்கு நான் பொறுப்பல்ல என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெனிபர் அன்டநெட் பெரேரா.

5-794

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, எரோனஸ் ஒழுங்கை, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு, இல. 365/2 ஐச் சேர்ந்த அருணா கென் என்றறியப்பட்ட அருணா தேவராஜ் ஆகிய நான், மட்டக்களப்பு, நாவற்குடா, மாதர் வீதி, இல. 33 ஐந் சேர்ந்த ஆறுமுகம் கண்ணாமுத்து நடராஜாவிற்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு டீ. சீ. சின்னையா வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1993, நவெம்பர் மாதம் 1 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணி தத்துவ இல. 2125 இனை 2012, ஐப்பசி 19 ஆந் திகதி அமுலுக்கு வருமாறு இரத்துச்செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன். அத்துடன் சொல்லப்பட்ட ஆறுமுகம் கண்ணாமுத்து நடராஜாவினால் என் சார்பாக மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

அருணா கென் என அறியப்பட்ட அருணா தேவராஜ்.

5-784

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்கிஸ்ஸ, வட்டராப்பொல வீதிக்கு அப்பால், இல. 97சீ, அபேசேகர வீதி எனும் முகவரியில் வதியும் ஹேமலதா சந்திரா கருணாரட்ன குணவர்தன ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சரோஜா ரேணுகா கருணாரட்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 3370 ஆம் இலக்கம் மற்றும் 2012, மே 2 ஆந் திகதியைக் கொண்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் உள்ள எழுத்து மூலம் அதிகாரம்பெற்ற புத்தகத் தொகுதி/பக்கம் 101/64 மற்றும் நாளேடு இலக்கம் 5404, 2012.08.07 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு கல்கிஸ்ஸ, வட்டராப்பொல வீதிக்கு அப்பால் இல. 97சீ, அபேசேகர வீதி எனும் முகவரியில் வதியும் ஆனந்த துஷ்மந்த குணவர்தன மற்றும் சிரியா வத்ஸலா சாந்தனி குணவர்தன ஆகியோரினால் எனக்கு வழங்கப்பட்ட 3730 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதனால், மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவம் 2013, திசெம்பர் 31 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு, வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹேமலதா சந்திரா கருணாரட்ன குணவர்தன.

5-805

---

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : கெவில்டன் இலெக்ட்ரிகல் புறடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4082
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : கெவில்டன் பவர்வெயா (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 02.04.2014

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

5-871

---

## பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : பீஈ பிளஸ் கெறெசல் மோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 4167
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 146, டோசன் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : கெறெசல் மோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி : 02.04.2014

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

5-872

## பொது அறிவித்தல்

ஜீஎஸ்எம் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பதிவிலக்கம் : பீவீ 97708) 2014, மாச்சு 20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

பதிவு முகவரி : இல. 934, அகிறிகுல மாவத்தை, கொட்டாவ, பன்னிப்பிட்டிய, இலங்கை

5-807

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிட்டோ குலோதிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98404
கூட்டிணைப்புத் திகதி : 2014.05.05
பதிவு முகவரி : இல. 27 1/1, ரோஸ்மேட் பிளேஸ், கொழும்பு 7

கம்பனிச் செயலாளர்.

5-800

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : த பாத் ஸ்டோர் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98336
பதிவு முகவரி : இல. 68, எஸ். டீ. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, கொஹுவல, களுபோவில

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 5958.

5-842/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜேம்ஸ் வில்கி இன்டீரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 98367
பதிவு முகவரி : இல. 40, கோல்பேஸ் கோர்ட் 2, கொழும்பு 3

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 5958.

5-842/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன :-

| கம்பனியின் பெயர் | பதிவு இலக்கம் | கூட்டிணைக்கப் பட்ட திகதி | பதிவு அலுவலகம் |
|---|---|---|---|
| (1) ப்றோ எக்ஸ் நியூசிலாந்து (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98271 | 2014.04.28 | இல. 104, ஹவ்லொக் சென்ரல் பில்டிங், ஹவ்லொக் வீதி, கொழும்பு 5 |
| (2) ஸ்ரடி பிளஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 98366 | 2014.04.30 | இல. 129/1, ஸ்ரீ சரணங்கர வீதி, தெஹிவளை |

பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்.

5-837

---

## கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயரானது 2014, சித்திரை மாதம் 29 ஆந் திகதியிலிருந்து மாற்றம் பெற்றுள்ளது :-

கம்பனியின் முன்னைய பெயர் : இன்ரநஷனல் ஹொஸ்பிட்டலிட்டி மெனேஜ்மென்ட் அகடமி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 93741
கம்பனியின் பதிவு அலுவலகம் : இல. 76, இரண்டாவது வீதி, கொட்டிகாவத்தை வீதி, கொதட்டுவ புதிய நகரம்
கம்பனியின் புதிய பெயர் : இன்டநஷனல் ஹொஸ்பிட்டலிட்டி அன்ட் மெனேஜ்மென்ட் அகடமி (பிறைவேட்) லிமிட்டெட்

பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள்.

5-836

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 90/6ஏ/02, டன்பார் வீதி, அட்டனில் வசிக்கின்ற கண்ணப்பன் சங்கர் ஆகிய நான், இத்தால் அறியத்தருவதாவது-

இலக்கம் 78/2ஜே, பொன்னகர், அட்டனில் வசிக்கின்ற சொக்கலிங்கம் சிவபாலசுந்தரம் என்பவருக்கு வழங்கப்பட்ட 2010.02.20 ஆந் திகதியிடப்பட்ட 130 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரம்

2014.02.28 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

கண்ணப்பன் சங்கர்.

5-835

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, பாமங்கட, இல. 58, துட்டுகெமுனு வீதி எனும் முகவரியில் வதியும் ரணசிங்ஹ முதியன்சேலாகே திலக சிரியாணி சந்திரசிரி ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். பீ. என். அபேரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 259 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் உள்ள எழுத்து மூலம் அதிகாரம்பெற்ற தொகுதி/பக்கம் 346/78 மற்றும் நாளேடு இலக்கம் 16480 மற்றும் 2006.12.06 ஆந் திகதி தெஹிவளை, பாமங்கட, இல. 58, துட்டுகெமுனு வீதி எனும் முகவரியைச் சேர்ந்த மனோ ரஞ்சன் விஜேபாகு என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை கூறப்பட்ட அற்றோணி தத்துவம் இல. 259 இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதனால் மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவம் 2013, ஒற்றோபர் 26 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்பட்டு, வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ரணசிங்ஹ முதியன்சேலாகே திலக சிரியாணி சந்திரசிரி.

5-806

---

## ஏல விற்பனைகள்

### செலான் வங்கி பீஎல்சீ - காத்தான்குடி கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

''கடன்பட்டோர்'' என்ற வகையில் மட்டக்களப்பு ஆரையம்பதி பூங்குன்றத்தில் பதிவு இல. ஆர்ஈவீ/ஆர்பீஎன்/01/பி1 கொண்டுள்ள மெசர்ஸ் ''லதா கொன்ஸ்ரக்ஷன்'' என்ற பெயர் வடிவில் அமைந்த வியாபார பங்குடைமையாளரான யோகேஸ்வரி மகாலிங்கம் மற்றும் சோமசுந்தரம் மகாலிங்கம் என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

#### முதலாவது ஏலவிற்பனை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப் பற்று அரைப்பட்டை கிராமத்தில் அரைப்பட்டையில் அமைந்துள்ள கிழக்குப் பகுதியில் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் வடக்கில் இருந்து தெற்கு வரை ஆறு மற்றும் இரண்டில் ஒன்று (6 1/2) வெதமும், கிழக்கில் இருந்து மேற்கு வரை எட்டரை (8 1/2) வெதமும் மற்றும் தெற்குப் பகுதியில் ஒன்பது (9) வெதமும் மற்றும் தென்மேற்கு மூலைப்பகுதியில் மேற்கு பங்கில் காணியில் நடைபாதை மூன்று (3) கியூபிட் அகலத்தில் மேற்கு வேலியும் அமைந்துள்ளது. இது அனைத்து வழிமுறை விதிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜா என்பவரினால் 2005.04.04 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. ஏஎஸ்/2005/392 இல் குறிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரைப்பட்டை கிராமத்தில் ஆரையம் பதியில் சகலதும் பிரிக்கப்பட்டு, அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணி ஒன்பது தசம் மூன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 9.37பே.) அல்லது 0.237 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2014, யூன் 19 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- காத்தான்குடி செலான் வங்கிக் கிளையிலிருந்து புதிய கல்முனை வீதியால் சுமார் 1.2 கி. மீ. தொலைவிலுள்ள ஆரையம்பதி வரை சென்று வலது பக்கமாக உள்ள தென் பவுன்டறி வீதியால் சுமார் 600 மீற்றர் சென்றால் பழைய கல்முனை வீதியை அடையலாம். பின்னர் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் 5 ஆம் கி. மீ. கட்டையை அடைந்து பின் இடதுபுறமாகத் திரும்பி 75 மீற்றர் சென்று வலதுபக்கமாக உள்ள பாதையால் 25 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

#### இரண்டாவது ஏலவிற்பனை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று அரைப்பட்டையில் அமைந்துள்ள ''செக்கட்டியார் வளவு'' என்று அழைக்கப்படுகின்ற சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் வடக்கில் பத்தொன்பது (19) வெதமும், கிழக்கில் பன்னிரண்டும் நாலில் மூன்றும் (12 3/4) வெதமும் மற்றும் தெற்குப் பகுதியில் தென்கீழ் மூலையில் மேற்கு வரை ஏழு மற்றும் நாலில் ஒன்றும் (7 1/4) வெதமும் மற்றும் வடக்கில் ஐந்து (5) வெதமும் மற்றும் இதிலிருந்து தெற்கு, தென்மேற்கு மூலைப்பகுதி வரை (7) வெதமும் மற்றும் மேற்கில் ஆறு மற்றும் நாலில் ஒன்று (6 1/4) வெதமும் அமைந்துள்ளது. இது அனைத்து வழிமுறை விதிகளையும் ஒருங்கே கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட சொத்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜா என்பவரினால் 2006.08.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட நிலவரைபட இல. ஏஎஸ்/எம்பீ/37 இல் குறிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கு மண்முனை மட்டக்களப்பு செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேச சபை எல்லையில் ஆரையம்பதி கிராமத்தில் பழைய கல்முனை வீதியில் அமைந்துள்ள ''செக்கட்டியார் வளவு'' என்று அழைக்கப்படுகின்ற சகலதும் பிரிக்கப்பட்டு, அடையாளமிடப்பட்டு அறியப்பட்டுள்ள காணி பதினெட்டு தசம் ஒன்பது நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 18.94பே.) அல்லது 0.0479 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2014, யூன் 19 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- காத்தான்குடி செலான் வங்கிக் கிளையிலிருந்து பழைய கல்முனை வீதியால் ஆரையம்பதி பழைய சந்தை வரை செல்லவும். சந்தையின் வடக்குப் பகுதியில் உள்ள வீதியால் 25 மீற்றர் சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.03.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.03.10 ஆந் திகதி ''டெயிலி மிரர்'' மற்றும் ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2014.02.19 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதி தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலிங்கோ செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. 2456475, 2456479.

துசித கருணாரத்ன (ச.நீ),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

5-767

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.10.04 ஆந் திகதிய 1831 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2013.09.23 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெய்லி நியூஸ்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 39, வில்பிரட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தன 2014.06.28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு கடைத்தெரு எல்லைகளுள் மாத்தறை பிரதேச சபை செயலாளர் பிரிவில் மாத்தறை மாநகர சபை எல்லைகளுள் மாத்தறை-கோட்டை கிராம அலுவலர் பிரிவு 416சீ இல் கோட்டை, வில்பிரெட் குணசேகர மாவத்தையில் கொம்பனியேலிந்தகாவவத்த அல்லது கொஹொம்ப கஹவத்த என அழைக்கப்படும் போர்டன் ஹவுஸ் என யாவரும் அறிந்ததுமான வரிமதிப்பிலக்கம் 15 ஐக் கொண்டதுமான காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. பீ. சுனில் தயாரித்த 2003, செத்தெம்பர் 12 ஆந் திகதியிட்ட வரைபட இல. 778 இல் துண்டு ஏ என அடையாள மிட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : வில்பிரெட் குணசேகர மாவத்தையும் ; கிழக்கு : வரிமதிப்பிலக்கம் 6 (பழைய இல. 106) ஐக் கொண்ட சுவஸ்திக என அழைக்கப்படும் நிலமனையும் ; தெற்கு : சீ. எஸ். ஜயவர்த்தன தயாரித்த வரைபட இல. 1441 இல் அதே காணியின் துண்டு 1 உம் ; மேற்கு : வரிமதிப்பிலக்கம் 103 ஐக் கொண்ட கொஹொம்பகஹவத்தயின் பகுதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 778 இன்படி இருபத்தேழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 27பே.) விஸ்தீரண முடையது. இது மாத்தறை காணிப்பதிவகத்தில் ஏ 456/28 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

எச். எம். ஆரியவன்ஸ,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தெவிநுவர கிளை.

5-828

---

### சம்பத் வங்கி பீ எல் சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 19 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

#### சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை

கே. எச். ஜயசிங்ஹ - கணக்கு இல. 0048 5000 0730

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால்

2013.09.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2014.01.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2013.12.31 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, எண்பத்துநான்கு இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூற்றைம்பத்தெட்டு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 84,11,558.26) 2013, ஓகத்து 6 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நாற்பத்தொரு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து நூற்றறுபத்தாறு ரூபா எண்பத்துநான்கு சதம் (ரூ. 41,32,166.84) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%), மேலும் இரண்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 2,68,500) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) மேலும் எண்பத்திரண்டாயிரத்து எண்ணூறு ரூபா (ரூ. 82,800) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மேலும் இரண்டு இலட்சத்து மூவாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 2,03,600) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஒன்பது வீதம் (9%) மேலும் முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2014.06.19 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவின் மீ ஓயென் எகொட கோரளேயின் வன்னி ஹத் பத்துவின் கிரிபாவ பிரதேச சபை எல்லைகளுக்குள் தம்சோபுர கிராம அலுவலர் பிரிவின் ராஜாங்கன கொலனியின், வலதுக் கரை, ட்ரக் 03 இல் அமைந்த ''மில்லகாஹாபிட்டியகெலே'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் இந்ரதிஸ்ஸ கொட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, மார்ச் 25 ஆந் திகதி யிடப்பட்ட இல. 7307 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : எம். ஜே. ஹீன்பண்டா உரிமம் பெற்ற காணி ; கிழக்கு : ஆர். எம். பீ. ஜயபால உரிமம் கோரும் காணி ; தெற்கு : வீதிக்கான ஒதுக்கம் ஆனால் மிகத் திருத்தமான அதே வரைபடத்தின் லொட் 02 மற்றும் பாதைக்கான ஒதுக்கம் ; மற்றும் மேற்கு : வீதிக்கான ஒதுக்கம் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) அல்லது சைபர் தசம் இரண்டு சைபர் இரண்டு நான்கு ஹெக்டேயர்கள் (0.2024 ஹெக்டேயர்கள்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங் களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 7307 எனும் வரைபடத்திற்கு அமைவாக நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் LDO නික/ගිරි/62/201 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 1997, ஓகத்து 06 ஆந் திகதியிடப்பட்ட ஜயபூமி அனுமதி இல. Kuru/ Pra/10879 இன் கீழ் விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடு கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது:-

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவின் மீ ஓயென் எகொட கோரளேயின் வன்னி ஹத் பத்துவின் கிரிபாவ பிரதேச சபை எல்லைகளுக்குள் தம்சோபுர கிராம அலுவலர் பிரிவின் ராஜாங்கன கொலனியின், வலதுக் கரை, ட்ரக் 03 இல் அமைந்த ''மில்லகாஹாபிட்டியகெலே'' என்றழைக்கப்படும் காணிக்கு அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : எம். ஜே. ஹீன்பண்டா உரிமம் கோரும் காணி ; கிழக்கு : ஆர். எம். பீ. ஜயபால உரிமம் கோரும் காணி ; தெற்கு : வீதிக்கான ஒதுக்கம் ; மற்றும் மேற்கு : வீதிக்கான ஒதுக்கம் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் கூறப்பட்ட இல. 7307 எனும் வரைபடத்திற்கு அமைவாக நிக்கவெரட்டிய காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் නික/ගිරි/62/201 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு மேற்குறிப்பிடப்பட்ட வளவின் நிரந்தரமாக நிறுவப்பட்ட மற்றும் பொருத்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் வருமாறு :-

| MODEL (மாதிரி) | MACHINE (இயந்திரம்) | NO. OF UNITS (அலகுகளின் எண்ணிக்கை) |
|---|---|---|
| 1 | Elevators Single 18 ft. with 3HP motor | 01 |
| 2 | Elevators Single 12 ft. with 3HP motors | 05 |
| 3 | Elevators Single 14 ft. with 3HP motor | 01 |
| 4 | Elevators Single 10 ft. with 3HP motor | 01 |
| 5 | Husker- - LM 24 Chinese - MLGT 25S Standard 2002 With 7.5 HP motors | 01 |
| 6 | Husker- (One shot) Chinese - MLGT 25A Standard 2007 Serial No 6131 With 7.5 & 2 HP motor | 01 |
| 7 | Polisher, MM 11 Double China 15HP motor | 01 |
| 8 | Polisher, N70, China with motor 20HP Serial No 75-11KY | 01 |
| 9 | Detoner 2002 Indian with 3 HP motor With ran | 01 |

| | MODEL (மாதிரி) | MACHINE (இயந்திரம்) | NO. OF UNITS (அலகுகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 10 | | Grain & Husk separator with 3 HP motor China Model MGIZ - 2008 | 01 |
| 11 | | Fanel Board | 01 |
| 12 | BR-75 | Un-matured paddy ("Bol") & black Seed remover | 01 set |
| | S - 75 | 4 hour paddy soaking equipment with pump electric starter, Water & steam Distribution system | 1 set |
| | HE - 75 | Heat exchanger with temperature & Flow controls | 1 set |
| | PB - 3 | Par - boiling & steam distribution system | 1 set |
| | | Stages for the above machinery, 36ft. height | 1 set |
| 13 | LSU - 75 | LSU type dryer with capacity Controlling System (Drying Capacity from 2000 to 15000 Kgs can be adjusted) | 1 set |
| 14 | E-75 | Elevator to deliver the paddy to the Un- matured paddy remover & dryer (capacity - 6000 kgs per hr) | 2Nos |
| 15 | B-75 | Paddy husk fired, fired tube efficient (Patented) boiler with less heat wastage | 1 set |

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி குழுமச் செயலாளர்.

5-834

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***816 மற்றும் 1014 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**மேல் மாகாணம், கொழும்பு மாநகர சபை மற்றும் மாவட்டம், வனாத்தமுல்லைப் பிரிவு, பேஸ்லைன் வீதி, தெமட்டகொடை, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, இல. ஜீ270 (பகுதி) என்ற முகவரியில் அமைந்துள்ள அனுமதிப் பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஏ. டி. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1990 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 2 ஆந் திகதியிடப்பட்ட 1015 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (அனுமதிப் பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஏ. த சில்வா அவர்களால் வரையப்பட்ட 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 9 ஆந் திகதி மேலொப்பமிடப்பட்ட) வரையறுக்கப்பட்ட காணித்துண்டு, அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக. இந்தக் காணி கொழும்பு காணிப்பதிவகப் பிரிவின் தொகுதி ஏ இன் 630 ஆவது இணைப்பக்கத்தில் 153 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 01.2பே.)**

*(குளியாப்பிட்டி பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயக்கொடி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட, 816 ஆம் இலக்க பிணை உறுதி மற்றும் 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 1014 ஆம் இலக்க பிணை உறுதி என்பனவற்றின் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த இல. பீவீ 1656 என்ற இலக்கம் கொண்ட (முன்னைய இலக்கம் என்(பீவீஎஸ்) 3201) மற்றும் இல. 270/55, டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு 9 என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள கமிலஸ் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீக்கு (முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 68,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்.
122 வருட கால சேவை அனுபவம்.

| | |
|---|---|
| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@ sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@ samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

5-798

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, றாகம்பற்று, வத்தளை-மாபோலை நகர சபை எல்லைகளுக்குள், வத்தளையில் அமைந்துள்ளதும் ஹேகித்தை, 3 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பு இலக்கங்கள் 36/6, 36/6ஏ, 36/6பி, 36/6சீ ஐக் கொண்டதும் "கெந்தகேவத்தை மற்றும் போலந்தபத்திரகேவத்தை மற்றும் கும்புற" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன்வெல அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010.08.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 8030 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப் பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணியினது) கொழும்பு காணிப்பதிவகத்தில் தலைப்பு பி. 1116/87 இன்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது. உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரவிக்கிரம அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999.09.05 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 189/1999 இல் துண்டு 1ஏ இன் வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28.59 பே. மேலும் திருத்தமாக 0ஏ. 0றூ. 29.95பே.)***

*(மெக்னட் ஸ்ரீல் எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் பங்கு தாரர்களாக வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கடப்பாடுடையவரான பெரியசாமி ரமேஷ் மற்றும் ஈடுவைத்தவர் கடப்பாடுடைய வரான சுப்பையா ரமேஷ் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவாதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2012, சனவரி 27 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 2291 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வீதி வழியே வத்தளை வரை சென்று ஹேக்கித்தை வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 150 மீற்றர் சென்று, 3 ஆவது ஒழுங்கைக்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 25 மீற்றர் சென்று, வீதிக்கு உட்புகு வழியை நோக்கியுள்ள இவ்வாதனத்தை அடைவதற்கு 12 அகல வீதி ஒதுக்கிற்கு மீண்டும் வலப்பக்கம் திரும்பவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனங்களை முறையே 2014, யூன் 13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.10.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்" "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
5. எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா ;
6. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டுவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 03, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சிரேஷ்ட முகாமையாளர், சட்ட சம்பந்தமானது" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667229, 011-4667237, 011-4667230, 011-2565573.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் பட்டய ஏலதாரர்.

இல.134, பெத்தகான வீதி,
கோட்டே.
தொலைபேசி இல. 2873656, 0777 672082.
தொலைநகல் இல. : 2871184.

5-874

### மக்கள் வங்கி – பதுளை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

***ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளைப் பிரிவு ரில்பொல கோரளை, வெதிகுணேயில் அமைந்துள்ள ''கொலொன்கஹ ஹேனகும்புர, கொலொன்கஹஹேன, கல்கொடேஹேன மற்றும் கல்கொடவத்த'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எம். பி. திசாநாயக்க என்பவர் தயாரித்த 2002.04.24 ஆந் திகதியைக் கொண்ட 1360 ஆம் இலக்க வரைபில் காட்டப்பட்டு லொட் 1 ஆக அடையாளமிடப்பட்டுள்ள பிரித் தொதுக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட மூன்று றூட் முப்பத்தியாறு தசம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 36.8பே.) பரப்பளவைக் கொண்ட லொட் 1 காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் விளைச்சல் உட்பட அனைத்துடனுமாகும்.***

*மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் 2014.06.27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு இங்கு கீழ்க்காணும் விபரங்களைக் கொண்ட ஆதனம், ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்கு.-** *2010.04.16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2011.01.10 ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் பட்டுள்ள ஏலவிற்பனை அறிவித்தலுக்கு கவனம் செலுத்தவும்.*

**ஆதனத்தைச் சென்றடைதல்.-** *பதுளை நகரத்தின் விஹாரகொட சந்தியிலிருந்து பசறைப் பாதையில் சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் 137 ஆம் கிலோ மீற்றர் தூண் அருகில் பாதையின் இடதுபுறமாக இவ்வாதனம் அமைந்துள்ளது.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** *ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணும் முறையில் பணம் செலுத்துதல் வேண்டும் :-*

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக 1,000 ரூபா ;
(5) விற்பனை செலவுகளும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும் ;

*கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் இல. 24, ஆர். எச். குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள பதுளை பிரதேச தலைமை அலுவலகப் பிரதேச முகாமையாளர் அவர்களிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 055-2222165, 055-2223068 ; தொலைநகல் இல. : 055-2222361.*

*உரிமை உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% இற்கான பணம் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.*

*டபிள்யு. ஜயதிலக்க (சமாதான நீதவான்),*
*பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 48/1, கலுகல்பிட்டிய,*
*பதுளை.*
*தொலைபேசி இல. : 055-2230846, 072-3438130.*

*5-830*

---

### மக்கள் வங்கி – பதுளை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

***ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பதுளை மாநகர சபை எல்லைக்குள் கெந்தலகமயில் அமைந்துள்ள ''தளுக்கஹகும்புர'', ''கல்பொத்தே கும்புர'', ''பிட்டியகெதரயாய கும்புர'', ''பிட்டியேகும்புர'', ''தந்டேகும்புர'', ''வெல்லேஅராவேபிட்டிய'', ''தலுக்கஹகும்புர அஸ்வனாத்த'', ஒயவலானே வத்த'' என அழைக்கப்படுவதும் அறிந்ததுமான காணி அதிகாரம் அளிக்கப்பட்ட நிலஅளவையாளர் எம். புவர் ஸ்மாயில் என்பவரால் வடிவமைக்கப்பட்ட 364 ஆம் இலக்க 1972.01.06 ஆந் திகதியுடைய எல்லாமாக பிரித்து குறிக்கப்பட்ட நிலவரைபடத்தின் குறிக்கப்பட்ட பிரிவின் தொகுதி இல. 02 ஆன பரப்பளவு இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணம் கொண்டதாக உள்ள காணியும் கட்டிடமும் பயிர்ச்செய்கையும் அதிலுள்ள அனைத்தும்.***

*மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2014.07.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**மேலதிக விபரங்களுக்கு.-** *2008.11.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2008.12.01 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் ''டெயிலி நியூஸ்'' ஆகிய செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் பட்டுள்ள ஏலவிற்பனை அறிவித்தலுக்கு கவனம் செலுத்தவும்.*

**ஆதனத்தைச் சென்றடைதல்.-** *பதுளை முதியங்கனை ரஜமஹா விஹாரையின் பிரதான நுழைவாயை அண்மித்துள்ள மணிக்கூடு அருகிலிருந்து புகையிரத நிலையப் பாதைக்குப் பிரவேசித்துச் சுமார் 25 மீற்றர் தூரம் சென்று இடதுபுறமாக அமைந்துள்ள (முதியங்கனை பன்சல பின்புறமாகவுள்ள) சுற்றுப்பாதையில் சுமார் 300 மீற்றர் செல்லும்போது பாதையின் வலது புறமாக குமாரசிங்ஹ பாதையை அடையலாம். அதில் சுமார் 200 மீற்றர் தூரத்தில் பாதையின் இடது புறமாக 27 ஆம் இலக்க இடத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணும் முறையில் பணம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக விற்பனை விலையில் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளர் கொடுப்பனவாக 500 ரூபா ;
(5) விற்பனை செலவுகளும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும் ;

கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கியின் இல. 24, ஆர். எச். குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள பதுளை பிரதேச தலைமை அலுவலகப் பிரதேச முகாமையாளர் அவர்களிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 055-2222165, 055-2223068 ; தொலைநகல் இல. : 055-2222361.

உரிமை உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% இற்கான பணம் திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

டபிள்யூ. ஜயதிலக்க (சமாதான நீதவான்),
பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 48/1, கலுகல்பிட்டிய,
பதுளை.
தொலைபேசி இல. : 055-2230846, 072-3438130.

5-831

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.